பத்திரிக்கை செய்தி

விவசாய மின் இணைப்பு வழங்க அப்போதைய கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கிராம அலுவலர் ஆகியோருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.செல்வராஜ், மணப்பாறை கிராமம், மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்க சிட்டா, அடங்கல் மற்றும் விவசாய மின் இணைப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்க திரு.தங்கவேல், கிராம நிர்வாக அதிகாரி, இடப்பட்டி கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் திரு.வெள்ளைச்சாமி, கிராம அலுவலர், இடப்பட்டி கிராம நிர்வாக அலுவலகம், மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம் ஆகியோர்கள் தங்களுக்கு ரூ.500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 22.09.2009 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.தங்கவேல், கிராம நிர்வாக அதிகாரி, மற்றும் திரு.வெள்ளைச்சாமி, கிராம அலுவலர், ஆகியோர்கள் லஞ்சபணம் ரூ.500/- பெற்றபோது கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கானது ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 25.06.2026ந் - தேதி திரு.தங்கவேல், கிராம நிர்வாக அதிகாரி அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.4,000/- அபராதம் விதித்தும், திரு.வெள்ளைச்சாமி, கிராம அலுவலர் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.2,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.